**கு.கண்ணன்**
உதவிப்பேராசியர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகக் கலை, அறிவியல் கல்லூரி
மேட்டூர் அணை - 636 401
Kannantamizh@gmail.com

# சங்க இலக்கியம் சுட்டும் உணவுகள் (மருதம்)

நாகரிக வளர்ச்சியின் அடித்தளமான சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவுகளைத் தட்பவெட்ப நிலைக்கு ஏற்பவும் வாழும் நிலப்பகுதிக்கு ஏற்பவும் உண்டு வந்தனர். இயற்கையாக அமைந்த நிலப்பகுதிகளில் கிடைக்கப்பெற்ற பொருட்களோடு தாங்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் உணவாகக் கொண்டிருந்தனர்.

## உணவு உண்ணும் முறை

பல்லினால் கடித்தல் நக்கல் பருகல் விழுங்கல் மற்றும்
மெல்லவே சுவைத்தலாகும் வினவில் ஐந்துணவு தாமே (சூடாமணி நிகண்டு)

என்னும் சூடாமணி நிகண்டின் வரிகள் உண்ணும் வகையைக் கடித்துண்பது, நக்கியுண்பது, பருகியுண்பது, விழுங்கியுண்பது, சப்பியுண்பது என்று பகுத்துள்ளது.

## உணவு - சொற்பொருள்

சாப்பாடு என்னும் சொல்லிற்குத் தமிழில் அன்னம், உண்டி, அடிசில், உணவு, சோறு என்று பலவகையான சொல்லாடல்கள் உள்ளது. தற்காலத்தில் உண்டியையும் உணவையும் அடிசிலையும் சோற்றையும் அன்னத்தையும் பொங்கலையும் இட்லியையும் இடியாப்பத்தையும் பிரியாணியையும் கூட சாப்பாடு என்னும் பொதுப்பெயரால் அழைப்பதுண்டு.

சப்பிடு → சாப்பிடு → சாப்பாடு ஆக சொல் வளர்ச்சியடைந்திருக்கலாம்.

சப்புதல் - மெல்லுதல், குதப்புதல், உறிஞ்சிக்குடித்தல் என்றெல்லாம் பொருள் அடக்கம் கொண்டுள்ளது.

**பண்டைய காலத்தில் உணவின் வகைகள்**

உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் உற்பத்தி செய்த உணவுப் பொருட்களைப் பக்குவப்படுத்தியும் உட்கொண்டனர் பழந்தமிழர்கள். மரக்காடு உணவு (பாகற்காய், வழைக்காய், சுரைக்காய்) கனி உணவு (மா, பலா, கொய்யா, வாழைப்பழம்) இறைச்சி உணவு (வேட்டையாடிய விலங்குகள், வளர்ப்பு பிராணிகளிலிருந்து கிடைத்த இறைச்சி முதலியன) அரிசி உணவு (முங்கிலரிசி, நெல்லிருந்து பெறப்பட்ட அரிசி) பருகு நீர் (மோர், கரும்புச்சாறு) மது(கள்) போன்ற உணவுவகைகளைப் பண்டைய மக்கள் உட்கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

**இலக்கியமும் உணவும்**

பண்டைய இலக்கியங்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பகுத்து வைத்திருந்தன சூழல் நிலவளம் ஆகியவற்றைக் கொண்டு நிலப்பகுதி வெவ்வேறாகப் பகுக்கப்பட்டது போல் உணவு முறைகளும் நிலத்திற்கு நிலம் வேறுபட்டே காணப்பட்டது.

“குறுங்காழ் உலக்கை ஒச்சி நெடுங்கிணற்று
வல்ஊற்று உவரி தோண்டி தொல்லை
முரவு ஏாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி
வாராது அட்ட வாடுஊன் புழுக்கல்’’ (பெரும்பாண்ாற்றுப்படை - 97-100)

என்னும் ஆற்றுப்படை வரிகள் பாலைநிலத்துப் பெண் ஒருவள் நீர் குறைந்து வற்றிப் போகும் நிலையிலுள்ள ஒரு கிணற்றிலுள்ள உவர்நீரை எடுத்து வந்து விளிம்பு உடைந்துபோன ஒரு பழைய பானையில் ஊற்றி சிதைந்து போன அடுப்பில் வைத்து அரியாது சமைத்தாள் என்றும், அந்தச் சோற்றைக் காய்ந்த மாமிசத்துடன் உண்டனர் பாலைநில மக்கள் என்றும் கூறுகிறது.

**கரும்புச்சாறு**

வயல்வெளிகள் நிறைந்த மருத நிலத்தில் நெல்லும், கரும்பும் முக்கியப் பயிர்கள் ஆகும்.

“கரும்பி னெந்திரங் கலிற்றெதிர் பிலிற்றும்’’ (ஐங்.55)

என்னும் வரிகளில் மருதநிலத்தில் கரும்புச்சாறு பிழிய இயந்திரம் வைத்திருந்தனர் என்பதையும் உணவாக கரும்புச்சாறு இருந்துள்ளதையும் மேலும் கரும்பை அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் மன்னன் விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்திற்குக் கொணர்ந்து கொடுத்தான் என்ற தொன்மைச் செய்தியும் உண்டு. இதனை

"அறபெரன் மரபிற் கரும்பி வட்டந்தும்'' (புறம்.99)

என்னும் வரிகள் உணர்த்துகிறது. மேலும்,

"கரும்பின் எந்திரம் கட்பின் ஓதை'' (ம.காஞ்சி.258)

என்னும் வரிகள் கரும்பஞ்சாறு பிழியும் இயந்திரம் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

**அரசமைப்பும் உணவும்**

மக்களுடைய பசியைப் போக்கும் பொறுப்பும் கடமையும் அரசுடையதாய் இருந்தது. உணவு கிடைக்கும் இடங்களைத் தேடியே மக்கள் சாரைசாரையாகச் சென்றனர். இதனை,

"முட்டை கொண்டு வற்புலற் சேரும்
சிறுநுண் ணெறுப்பின் சில்லொழுக் கேய்ப்பர்
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைர் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதுற் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவனில்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமி னெமக்கே'' (புறம்.173)

என்னும் பாடல் வரிகளில் மழைபெய்யாமிலிருந்த வானத்தில் மழைபெய்யப் போகிறது என்பதை அறிந்த எறும்புகள் தங்கள் முட்டைகளைத் தூக்கிச் சுமந்து செல்வது போல் பாணர்களின் குழந்தைகள் தம் குடும்த்தார்க்குச் சோற்று மூட்டைகளைத் தூக்கிச் செல்வதைச் சோழ அரசன் பார்கிறான். அதைக்கண்ட பின் அரசன் பண்ணன் பசிப்பினிப் போக்கும் மருத்துவன் ஆவான். அவனை நான் காண வேண்டும் என்னுடைய வாழ்நாளையும் சேர்த்து பண்ணன் வாழ வேண்டும்

என்றும் அவன் குடியிருக்கும் இடம் அண்மையோ தொலைவோ என கேட்கிறான். இதன் மூலம் பசியைப் போக்குபவரே நெடுநாள் வாழ தகுதியுடையவர் என்னும் கருத்தை உணரமுடிகிறது.

அரசனுக்கும் அதுபொருந்தும் என்பதும் இப்பாடல் வழி உணர்த்துகிறது. உணவு வெறும் பசியைப் போக்கும் ஒன்றுமட்டுமல்ல அரசமைப்பையே உருவாக்கக்கூடிய ஒன்றாகவும் உணவை அளிப்பவரிடத்தில் தான் கூட்டமும் மக்கள் செல்வாக்கும் இருந்தது என்பதையும் உணரமுடிகிறது.

**இலக்கியங்களில் உணவு**

பண்டைய இலக்கியங்கள் பண்பாட்டு கருவூலமாய் நிகழ்ந்ததோடு மக்களின் வாழ்வுநிலையைக் காட்டும் கண்ணாடியாகவும் திகழ்ந்தது.

தேனினர் கிழங்கினர் ஊஆர் வட்டியர்

சிறுகட் பன்றிப் பழு-னி போக்கி

பொரு தொலை யானைக் கோடுசீர் ஆக

தூவொடு மவிந்த காய கானவர் (மலை.படு.152-155)

என்னும் வரிகளில் தேனையுடையவர், கிழங்கிணையுடையவர் தசை நிறைந்த பெரிய பெட்டிகளை உடையவர். சிறிய கண்கொண்ட பன்றியின் பழுதானவற்றைப் போக்கி நல்ல தசைகளோடு நிரம்பிய வட்டிகளையும் உடையவராய் கானவர் நிகழ்ந்தனர் என்பதை மலைபடுகடாம் உணர்த்துகிறது.

பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு

குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர் (மலைபடுகடாம், 168-169)

என்னும் வரிகளில் நெய் அதிகமாகச் செறிந்து பொலித்து வறுத்த பருந்தின் தசையும் நல்ல நிறமுடைய தினையரிசி சோற்றையும் வழங்கினார்கள் என்பதன் மூலம் தினையரிசியும், பருந்து இறைச்சியும் உணவாக இருந்தது அறியமுடிகிறது.

“வேய்கொள் அரிசி மிதவை சொரிந்த

சுவல்விளை நெல்லின் அவரை அம்புளிங்கூழ்

அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட” (மலைபடுகடாம்)

என்கிற வரிகள் வழியாக அவரை, மூங்கிலரிசி, விளைநிலத்து அரிசி ஆகியவற்றை புளி கலந்த உலையில் ஆக்கிய கூழ் அவர்களுடைய உணவாக இருந்துள்ளதை காண்கிறோம்.

பொன் அறைந்தன்ன நுண்நேர் அரிசி
வெண் எறிந்து இயற்றிய மாக்கண் அமலை
தண்ணென் நுண் இழுது உள்ளீடு ஆக
அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவீர் (மலைபடுகடாம்.440-443)

“பொன்னை நறுக்கினார் போல நுண்ணிய நேரான அரிசியை வெண்மை நிறமுடையதாய் ஆக்கி அதனுள் நன்கு சமைக்கப்பட்ட நெய் நெறிந்த கறித்துண்டுகளை இடைஇடையே வைத்து நாள்தோறும் உண்ணும்படி பெறுவீர்'' என்று விளக்கம் தருகிறது. மேலும்

“சோறு குறு என்னா ஊன்துவை அடிசில்'' (பதிற்று.45)

பகைவரை வென்ற வீரர்களுக்கு சோறு வேறு ஊன் வேறு என பிரித்தறிய முடியாதவாறு ஊன் நிறைந்த சோற்றை பெரும் விருந்தாக மன்னன் கொடுத்தான்.

மேற்கண்ட இருபாடல்களுமே அரிசிச் சோற்றிவள் ஊன் கலந்து வேகவைத்து உண்ணும் முறை இருந்துள்ளது. தற்காலத்தில் அதுவே பிரியாணி ஊன் சுவை அடிசில்) என்ற பெயர் மாற்றமும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் சங்க இலக்கியத்தில் கள்ளுண்ணுதல் சமுதாயத் தகுதியாகக் கருதப்பட்டது. ஔவை பாடிய பாடலொன்றில்

“சிறிய கட் பெறினே எமக்கீயு மன்னே
பெயெ கட்பெளினே
யாம்பாடத் தாம் மகிழ்ந்துண்ணும் மன்னே (புறம்.23)

“சிறிய அளவில் கள் பெறும் போது அதை எங்களுக்குத்தந்து பெரிய அளவில் தரும் போது எங்களுடன் சேர்ந்து எம்பாட்டுக்கு மகிழ்ந்துண்ணும் மன்னனே'' என்று கூறுகிறார். ஔவையின் இப்பாடல் வழி கள்பண்டைய சமுதாயத்தில் தகுதியாகவும் உணவாகவும் இருந்துள்ளதை உணர்கிறோம்.

**முடிவுரை**

சங்க இலக்கிய காலகட்டத்தில் அக்கால மக்கள் வாழ்ந்த வாழ்க்கையின் வழி அவர்களின் உணவு வேறுபட்ட போதிலும், அரசனும் மக்களும் சமமான உணவையே உண்டு வாழ்ந்து வந்துள்ளனர். தானமாகக் கொடுக்கும் உணவும் சிறப்பான நன்கு சமைக்கப்பட்ட உணவாகவே இருந்துள்ளதை அறிகிறோம். காய் உணவு, பழ உணவு, ஊன் உணவு, நீழ் உணவு எனப் பலவகையான உணவுகளைப் பண்டைய இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றது.